**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம்
06.03.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**Umesh Pandiyan (PW 3)**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

ஆஜரிலுள்ள எதிரிகளில் நடுவில் நிற்கும் நபர் என்னை உடைந்த கண்ணாடியால் வயிற்று பகுதியில் குத்தினார். சாட்சி ஆஜரிலுள்ள இவ்வழக்கின் 3ஆம் எதிரியை அடையாளம் காட்டுகிறார். எதிரிகள் என்னை தாக்கியதால் எனக்கு எனது வயிற்றின் வலது பகுதியில் ரத்தகாயமும், வயிற்றின் இடது பகுதியில் வெட்டுகாயமும், கைகளில் எனக்கு கீறல் காயங்கள் ஏற்பட்டது. நான் சுமார் 15 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றேன். அசா2 ஜெய்கணேஷ் என்பவருக்கு தலையில் பலமான வெட்டுகாயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் கண்ணாடி துண்டுகள் எதிரிகள் எங்களை தாக்குவதற்காக பயன்படுத்திய கண்ணாடி ஸ்லேப்புகளின் துண்டுகளாகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கும் நான் வேலை செய்யும் இடத்திற்கும் இடையே சுமார் 500மீ தூரம் இருக்கும். நான் கடந்த 3 1/2 வருடங்களாக பழக்கடை நடத்தி வருகிறேன். பொதுவாக நான் காலை 7 மணியளவில் கடைக்கு சென்றுவிட்டு மதியம் 12-1 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டு, பின்பு மாலை 4 மணியளவில் கடைக்கு மீண்டும் செல்வேன். எனது உறவினரான ஜெயராஜ் என்பவர் பாஸ்கரன் என்பவரிடமிருந்து 2016 வருடம் காலி மனை வாங்கிய கிரைய பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பமிடவில்லை. அவர் கிரையம் பெற்றதாக எனக்கு தெரியவந்தது. ஜெயராஜ் என்பவர் எனது சித்தப்பாவின் மகனாவார். பிரச்சனை நடந்த இடம் காலிமனை என்றால் சரிதான். நான் சம்பவத்திற்கு முன்னதாக காலிமனைக்கு அந்த இடத்தை விற்பனை செய்வதாக பேசிக்கொண்டிருந்ததால் சென்று பார்த்து வந்தேன்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.